

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை சார்பில் நடைபெற்ற "போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" நிகழ்ச்சியில் போதைப்பொருளுக்கு எதிரான விழிப் புணர்வு உறுதிமொழியை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் அரசு அலுவலர்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் எடுத்துக்கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கி.சண்முகம், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாநகராட்சி மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ் ஆகியோர் உள்ளனர்.

### தூய்மைப் பணியாளரின் மகளான

# துர்கா நகராட்சி ஆணையராக பணி நியமன ஆணை! அவரது பேட்டி கேட்டு அகமகிழ்ந்தேன்!

## கல்விதான் யாராலும் பறிக்க முடியாத சொத்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

**சென்னை, ஆக.14 –**

**தூய்மைப் பணியாளரின் மகளான திருமிகு துர்கா அவர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக நகராட்சி ஆணையாளர் பணி யிடத்திற்கு தேர்வு பெற்று பணி நியமன ஆணை பெற்றது தொடர் பாக அளித்த பேட்டி குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:–**

**நகராட்சி ஆணையராகப் பொறுப்பேற்கும் திருமிகு துர்கா அவர்களின் பேட்டியைக் கேட்டு அகமகிழ்ந்தேன்.**

**கல்விதான் ஒரு தலைமுறையையே முன்னேற்றிடும் ஆற்றல் பெற்றது என்பதற்குத் திருமிகு துர்கா அவர்களே எடுத்துக்காட்டு.**

**நான் மீண்டும் சொல்கிறேன்... கல்விதான் யாராலும் பறிக்க முடியாத சொத்து.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### மாவட்ட ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமை!

# திருவையாற்றிலிருந்து சொரக்குடிபட்டிக்குப் புதிய பேருந்து!

## ச.முரசொலி எம்.பி.- துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தனர்!

தஞ்சை, ஆக.14-

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு கிளையிலிருந்து சொரக்குடிபட்டியிலிருந்து இயக்கப்படுகிற நகர தட எண் A88 பேருந்தினை காலை மற்றும் மாலை நேரங்களில் வெண்டையம்பட்டி வழியாக வடுகன்புதுப்பட்டி வரை தட நீடிப்பு செய்து பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை ஏற்று, பேருந்து இயக்கத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி. திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன் முன்னிலையில் 09.08.2024 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

முதன்முறையாக பேருந்து வசதி கிடைத்ததற்காக மாணவர்கள், பொதுமக்கள் பெரிதும் மகிழ்ந்தனர். வடுகன்புதுப்பட்டியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் முதன்முறையாக பேருந்து இயக்கத்தினை வரவேற்று மாணவர்கள் பொதுமக்கள் மிகவும் மகிழ்ச்சியும் கோரிக்கையினை ஏற்று உடனடி நடவடிக்கை மேற்கொண்ட மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

பேருந்து இயக்கத்தின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன் ஆகியோர் மாணவர்களுடன் பேருந்தில் அமர்ந்து பயணம் செய்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், தெரிவித்ததாவது.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 05.08.2024 அன்று நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தின் மூலம் வடுகம்புதுப்பட்டி பள்ளி மாணவ மாணவியர்கள், பொதுமக்கள் 2 கிலோமீட்டர் காட்டுப்பாதையில் நடந்த சென்று வெண்டயம்பட்டி சாலையில் சென்று பேருந்தில் பயணிக்கும் நிலை இருக்கிறது எனவும் பேருந்து வசதி வேண்டியும் விண்ணப்பித்திருந்தனர். இம்மனு மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வடுகன்புதுப்பட்டி பகுதியைச் சேர்ந்த பள்ளி மாணவர்கள் பொதுமக்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில் திருவையாறு கிளை மூலம் இயக்கப்படும் தடம் எண்.A88 என்ற பேருந்து காலை மற்றும் மாலை நேரங்களில் சொரக்குடியில் நடை எடுத்து வெண்டயம்பட்டி வழியாக திருக்காட்டுப்பள்ளி வரை இயங்கக்கூடிய நடையினை வடுகன்புதுப்பட்டி வரை காலை 2 நடைகளும், மாலை திருக்காட்டுப்பள்ளியில் நடை எடுத்து சொரக்குடி செல்லும் 2 நடையினை வடகன்புதுப்பட்டி வரை என 4 நடைகள் (4 X2=8) கிலோமீட்டர் நீட்டித்து இயக்கிடவும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.இலக்கியா, மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி. உஷா புண்ணியமூர்த்தி, ஒன்றிய குழு தலைவர் செல்லக்கண்ணு (எ) அரங்கநாதன், ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் செல்வராஜ், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழக கோட்ட மேலாளர் தமிழ்ச்செல்வன் ராயமுண்டான் பட்டி ஊராட்சி தலைவர் திருமதி.கனிமொழி சிவகுமார் மற்றும் ஏராளமான பொதுமக்கள், மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

# திருத்தணியில் அறிவுசார் மையம்!

திருவள்ளூர், ஆக. 14–

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக திருத்தணி நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் ரூ.2.06 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தினை திறந்து வைத்ததை தொடர்ந்து கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபு சங்கர் ஆகியோர் கலந்து கொண்டு அறிவுசார் மையத்தினை பார்வையிட்டார்கள்.

முதலமைச்சர் அவர்களால் ரூ.2.06 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ள புதிய நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தில் மாணவர்கள் கல்வி மற்றும் பொது அறிவினை வளர்த்து பயன்பெறும் வகையில் 10 கணினி இணையதள வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் போட்டி தேர்வுக்கு தயாராகும் வகையில் அனைத்து விதமான புத்தகங்கள் இடம் பெற்றுள்ளன 60 நபர்கள் அமர்ந்து ஆய்வு கூட்டம் மற்றும் மாணவர்கள் தேர்வுக்கு தயாராகும் வகையில் அரங்குகள் உள்ளன. ஒரு குளிரூட்டபட்ட அறை போன்ற அனைத்து விதமான அடிப்படை வசதிகளோடு நவீன முறையில் இந்த அறிவுசார் மையம் அமைக்கப்பட்டுள்ளது.



தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு கிளையிலிருந்து சொரக்குடிபட்டியிலிருந்து இயக்கப்படுகிற நகர தட எண் A88 பேருந்தினை காலை மற்றும் மாலை நேரங்களில் வெண்டையம்பட்டி வழியாக வடுகன்புதுப்பட்டி வரை தட நீட்டிப்பு செய்து பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை ஏற்று, பேருந்து இயக்கத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, திருவையாறு சட்டமன்ற உறுப்பினர்துரை.சந்திரசேகரன் முன்னிலையில் 09.08.2024 அன்று கொடியசைத்து துவக்கி வைத்து பேருந்தில் பயணம் செய்தார்கள். அருகில் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.இலக்கியா, மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி.உஷா, புண்ணியமூர்த்தி, ஒன்றிய குழு தலைவர் செல்லக்கண்ணு (எ) அரங்கநாதன், ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் செல்வராஜ், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழக கோட்ட மேலாளர் தமிழ்ச்செல்வன் ராயமுண்டான்பட்டி ஊராட்சி தலைவர் திருமதி.கனிமொழி சிவகுமார் மற்றும் ஏராளமான பொதுமக்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

### திருச்சி தெற்கு மாவட்டத்தில்

# நாடாளுமன்ற உறுப்பினரின் நன்றி அறிவிப்பு சுற்று பயணம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

திருச்சி, ஆக.14-

திருச்சி - தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை வருமாறு:-

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில், திருச்சி கிழக்கு தொகுதி திருவெறும்பூர் தொகுதிகளில் திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ ஆகஸ்ட் மாதம் 13,14,16,21 தேதிகளில் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் பொதுமக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவிக்கின்றார்.



இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட ,வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள்,

அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாநகராட்சி, ஒன்றிய நகர, பேரூர் கழக சேர்மன்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், கழகத் தொண்டர்களும் பொது மக்களும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன் .

இவ்வாறு அறிக்கை விடுத்துள்ளார்.

### 'தமிழ்ப்புதல்வன்' திட்டம் மூலம் பெரம்பலூர் மாவட்டத்தில்

# 3,278 கல்லூரி மாணவர்கள் மாதந்தோறும் ரூ.1000 பெற்று பயனடைவர்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பெருமிதம்!

பெரம்பலூர், ஆக. 14 -

பெரம்பலூர் மாவட்டம் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத முன்னோடி திட்டங்களை மக்களுக்காக செயல்படுத்தி வருபவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் -"தமிழ்ப்புதல்வன்" திட்டத்தின் மூலமாக பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 32 அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் பயிலும் 3,278 மாணவர்கள் மாதந்தோறும் ரூ.1,000 பெற்று பயனடைய உள்ளனர் என போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

தமிழ்நாடு முத லமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதிய திட்டமான "தமிழ்ப் புதல்வன்" என்ற சிறப்பான திட்டத்தை கோயம்புத்தூர் அரசு கலைக் கல்லூரியில் தொடங்கி வைத்தார்கள்.

பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக்கல்லூரி கூட்ட அரங்கில் நடைபெற்ற தமிழ்ப் புதல்வன் திட்ட தொடக்க விழாவில், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ் தலைமையில், கல்லூரி மாணவர்களுடன் அமர்ந்து நேரலையில் பார்வையிட்டார். பின்னர் 430 மாணவர்களுக்கு மாதம் ரூ.1000 பெறுவதற்கான வங்கி பற்று அட்டைகளை போக்குவரத்துத்துறை அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியைப் பெருக்குவதிலும் குறிப்பாக இளைஞர்கள் உயர் கல்வி பெறும் வாய்ப்புகளை உயர்த்துவதிலும் மிகுந்த அக்கறை செலுத்தி திட்டங்களை வகுத்து வருகிறார்கள்.

அரசுப்பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று, உயர்கல்விக்குச் செல்லும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் "புதுமைப் பெண்" என்ற சிறப்பான திட்டத்தை 05.09.2022 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் 4,566 மாணவிகள் பயன்பெற்றுள்ளார்கள். இத்திட்டத்தால் உயர்கல்வி பயிலும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இத்திட்டத்தை மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் விரிவுப்படுத்திட வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில், அரசுப்பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்புவரை பயின்று, உயர்கல்விக்குச் செல்லும் மாணவர்களுக்கு மாதம் ரூ,1000 வழங்கும் "தமிழ்ப் புதல்வன்" திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று தமிழ்நாடு முழுவதும் தொடங்கி வைத்துள்ளார்கள். இத் திட்டத்தின் மூலம் பெரம்பலூர் மாவட்டத்தில் 3,278 மாணவர்கள் பயனடைய உள்ளனர். இந்த மாணவர்களுக்கு அவரவர் வங்கிக்கணக்கில் நேற்றே ரூ.1000 வரவுவைக்கப்பட்டுள்ளது என்பது குறி ப்பிடத்தக்கது,

இத்திட்டம் கல்லூரி செல்லும் மாணவர்களின் உள்ளங்களில் தன்னம்பிக்கையை வளர்க்கிறது, கல்வி கற்கும் ஆர்வத்தைப் பெருக்குகிறது. பெற்றோரின் பொருளாதாரச் சுமையைக் குறைக்கிறது. உயர் கல்வியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துகிறது. தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியை இந்திய அளவில் மேலும் உயர்த்துகிறது.

கல்விக்கு பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்ற உயரிய எண்ணத்தில் நம் முதலமைச்சர் இந்த திட்டத்தை செயல்படுத்தியுள்ளார். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் முன்னோடியான மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்து வருகின்றார். மாணவச்செல்வங்கள் அரசின் தி ட்டங்களை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டு நன்றாக படித்து வாழ்வில் உயர வேண்டும் என மனமார வாழ்த்துகின்றேன்.



இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக, இச்சிறப்பு திட்டத்தை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக மாணவர்கள் நன்றி தெரிவிக்கும் விதமாக, 1000 மாணவர்கள் ஒன்றிணைந்து "தமிழ்ப்புதல்வன்" என்ற எழுத்து வடிவில் நின்றார்கள். அவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்ட தொடக்க விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை மற்றும் நிகழ்ச்சி செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அதி நவீன மின்னணு வீடியோ வாகனத்தின் வாயிலாக நேரலையில் ஒளிபரப்பப்பட்டது, இந்நிகழ்வையும் போக்குவரத்துத்துறை அமைச்சர் பார்வையிட்டார்கள்.

அதனைத்தொடர்ந்து, நிகழ்ச்சி நடைபெற்ற வளாகத்தில், அமைக்கப்பட்டிருந்த நடமாடும் பணம் எடுக்கும் இயந்திர வாகனத்தில் மாணவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட பற்று அட்டைகளைப் பயன்படுத்தி போக்குவரத்துத்துறை அமைச்சர் முன்னிலையில் மகிழ்ச்சியுடன் பணம் எடுத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல்பிரபு, சார் ஆட்சியர் சு.கோகுல், மாவட்ட சமூக நல அலுவலர் ஜெயஸ்ரீ, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் மீனா அண்ணாத்துரை (பெரம்பலூர்), க.இராமலிங்கம் (வேப்பந்தட்டை), பிரபா செல்லப்பிள்ளை (வேப்பூர்), அனைத்து பேரூராட்சித்தலைவர்கள், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பரத்குமார், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள், உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்துத் துறைகளின் அலுவலர்கள், வங்கியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# ஏ.கே.ஜெகதீசன்

**ஆகஸ்ட் 14 (2020)**



**கழகம் தொடங்கப்பட்ட முதலே உறுப்பினராகிய மூத்த கழக முன்னோடியான இவர், வகுப்புவாரி உரிமை ரத்து செய்யப்பட்டபோது, சமூக நீதியின் போர்க்குரலாக சக மாணவர்களைத் திரட்டிப் போராடியவர்.**

**சேப்பாக்கம் பகுதிச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்பு வகித்தவர்.**

**பேரறிஞர் அண்ணா தலைமையில், தலைவர் கலைஞர் முன்னிலையில் கலைஞரின் "நச்சுக்கோப்பை" நாடகத்தை நடத்தி அதில் நடித்தவர். மிசா காலத்தில் கலைஞர் அவர்களுக்கு அவருக்கு உறுதுணையாக இருந்தார் என்பதற்காகவே போலீசாரால் கடுமையாகத் தாக்கப்பட்டதோடு, பொய் வழக்கில் கலைஞர் அவர்களுடன் கைது செய்யப்பட்டவர்.**

**1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் – 2001ல் மாநகராட்சியின் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக செயல்பட்டவர்.**

**2019ல் கழக முப்பெரும் விழாவில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால், முத்தமிழறிஞர் கலைஞரின் "நெஞ்சுக்கு நீதி"யில் பாராட்டப்பட்டுள்ள இவருக்கு "கலைஞர் விருது" வழங்கி சிறப்பித்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**